## முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
## அ.வ.எண். 145/2017

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ம் நாள் வியாழக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1. செல்வி. கல்யாணி.

### குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பி.சா.ஆ.49 ல் வாதி பெயரில் சர்வே எண் 190/1 க்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சர்வே எண் 192/3 மற்றும் 192/4 க்கு மின்சார இணைப்பு வாங்கியதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னால் தற்போது நான் தாக்கல் செய்த 50 ஆவணங்களை வாங்கி பார்க்க முடியாது. பி.சா.ஆ.50 ஆவணத்தை நான்தான் வாங்கினேன். அதில் என்னுடைய நிறுவனம் ஆவணத்தை வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. திரு.ஜி.எம்.ஜெயின் என்பருக்கும் நிறுவனத்திற்கு என்ன தொடர்பு என்பதற்கும் நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.50 ல் விண்ணப்பித்தவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் வில்லங்கச் சான்றிதழ் வழங்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த குடிநீர் வரி மின்சார் இணைப்பு தொடர்பான ஆவணங்கள் மோசடியாக பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கின் வாதி இந்த நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல்

செய்த அசல் வழக்கு எண் 49/2006 ல் ஏற்படுத்தப்பட்ட சமாதான குறிப்பின் அடிப்படையில்தான் வழக்கு சொத்து அவருக்கானது என்று நான் ஒப்புக்கொண்டதாக சொல்கிறார் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நீதிமன்றத்தில் வெளியே சமாதானம் ஏற்பட்டதாக கூறி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நான் நீதிமன்றத்திற்கு வந்து அந்த சமாதானம் என்னால் ஏற்பட்டது என்று சாட்சி கூண்டில் ஏறி சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த போது நான் நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன். அந்த சமாதான மனுவில் என்னை விசாரித்துதான் நீதிமன்றம் சமாதான மனுவை சமாதானத்தை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த சமயத்தில் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் பொது அதிகார முகவராக இருந்தேன். நான் இந்த வழக்கையும் அதே பொது அதிகார பத்திரப்படி 1, 2 பிரதிவாதிகளின் முகவர் என்ற முறையில் நடத்துகிறேன்.

3. என்னுடை எதிர்வழக்குரையில் வாதியின் தந்தை சர்வே எண்கள் 190/1 மற்றும் 190/3 ஐ சட்ட விரோதமாக ஆக்கிரமித்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் மாவட்ட ஆட்சியர் அவ்வாறு கூறியுள்ளார். நான் அந்த உத்தரவை பி.சா.ஆ.41 ஆக தாக்கல் செய்துளளேன். பி.சா.ஆ.41 ல் அவ்வாறு எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களுக்கு முரணாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 3ம் பிரதிவாதியாக நான் பிரதவாதிகள் 1 மற்றும் 2ன் பொது அதிகார முகவர் என்ற நிலையில் 4ம் பிரதிவாதிக்கு விற்பனை ஆவணம்

எழுதி பதிவு செய்த உடன் என்னுடைய முகவர் என்ற உறவு முடிவு பெற்றதும் என்றும் ஆகையால் பிழைத்திருத்தல் பத்திர எழுதி கொடுக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 6.12.2018 ல் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பிரதிவாதிக்கு வழக்கு சொத்து குறித்து ஒப்புதல் பத்திரம் எழுதி கொடுத்தது செல்லத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கு தேவைப்பட்டதால் அவ்வாறு எழுதி கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.14 ல் இந்த வழக்கில் நிலுவையில் இருக்கும் விவரத்தை சொல்லவில்லை. நான் இந்த வழக்கில் வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சி.ஆர்.பி எண் 4062/2017 வழக்கில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடை எதிர்வழக்குரையில் பாரா 5 ல் கூறப்பட்டுள்ள விவரங்கள் எனது அறிவுக்கு அப்பாற்பட்டது என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் வடக்கு அவர்கள் 02.04.2019 ல் பிறப்பித்த உத்தரவின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ன் படி வாதி அந்த உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்துள்ளார் என்றால் சரிதான். வருவாய் துறை அதிகாரிகள் சொத்தின் உரிமையாளரை தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல. என்னுடைய பதிலுரை பாரா 6 ல் சொல்லியுள்ள விவரங்கள் சமாதான குறிப்பில் நாங்கள் ஒப்புக்கொண்ட சங்கதிகளின் அடிப்படையில் வழக்கிற்கு தேவையற்றவை என்றால் சரியல்ல.

5. நான் பதிலுரை பக்கம் 7 ல் வாதி பெயரில் தாக்கல் செய்த மின்சார

இணைப்பு மற்றும் சொத்து வரி ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டவை அல்ல என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் வாதி குடும்பத்தினர் எழுதி கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று நான் இதுவரை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்க ஞாபகமில்லை. 1990 ல் வழக்கு சொத்து குறித்து தாஸ் என்பவர் கஜேந்திரன் என்பவருக்கு பொது அதிகாரம் எழுதி கொடுத்தார். அதிலிருந்து வாதி தரப்பில் ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார்கள். 2009 மற்றும் 2011 ல் வாதியின் குடும்பத்தினர் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார்கள். மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை நாங்கள் வாங்கி வைத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் செல்லாது என்று நான் வழக்கு தாக்கல் செய்யாததால் மேற்படி ஆவணங்கள் குறித்து இந்த வழக்கில் நான் கேள்வி எழுப்ப முடியாது என்றால் சரியல்ல.

6. வாதியின் தந்தைதான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்பதை நம்பிதான் நான் சமாதான உடன்படிக்கையில் ஈடுபட்டதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சரசா என்பவர் எழுதியதன் அடிப்படையில் நாங்கள் அதை நம்பினோம். சரசா என்பவர் வாதியின் தந்தைதான் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருப்பதாக எழுதியிருந்தார். மாதவரம் வட்டாட்சியர் வழக்கு சொத்து குறித்து பல விவரங்கள் சொன்னதாக என்னுடைய பதிலுரை பக்கம் 9 ல் கூறியுள்ளேன். அது குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. என்னுடைய பதிலுரை பத்தி 8 ல் கூறியுள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. வருவாய் துறை பட்டா குறித்த நடவடிக்கைகள்

அனைத்தும் அசல் வழக்கு எண் 49/2006 என்ற வழக்கில் ஏற்பட்ட சமாதான தீர்ப்பு மற்றும் தீர்பாணை வா.சா.ஆ.11ன் கீழ் உறுதிப்படுத்தப்படவதற்கு முன்பு ஏற்பட்ட பட்டா குறித்த நடவடிக்கைகள் என்றும் அது தற்போது வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. இடைக்கால் மனு எண் 301/2016 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் இந்த வழக்கு சொத்து சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ள விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் பற்றி சட்ட குறிப்புகள் எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி நல்ல எண்ணத்தில் அடிப்படையில் கிரையம் பெற்றவர் என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய கூடுதல் பதிலுரை பாரா 5ல் கூறியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. கூடுதல் எதிர்வழக்குரையில் நான் கூறியுள்ள ஆவணங்கள் பற்றிய விளக்கம் தவறானது என்றால் சரியல்ல. நான் அதில் கூறியுள்ள ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாவட்ட பதிவாளரின் 02.04.2019 உத்தரவு செல்லாது என்றால் சரியல்ல. அதை எதிர்த்து வாதி தாக்கல் செய்த மேல் முறையீட்டை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் பாரா 8ல் உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 49/2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட சமாதான குறிப்பு தீரப்பு மற்றும் தீர்பணையை செல்லாது என அறிவிக்க கோரி நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யாததால் அந்த சமாதான குறிப்பணை குறித்து இந்த வழக்கில் கேள்வி எழுப்ப முடியாது என்றால் சரியல்ல. வாதிதான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்ற முறையில்

வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் தந்தை பெயரில் 3486, 4397 என்ற இரண்டு பட்டாக்கள் வழங்கப்படுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்து வாதியின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வாதிதான் அரசாங்கத்திற்கு வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. 2013 க்கு முன்பு வழக்கு சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண் 49/2006 ல் ஏற்படுத்தப்பட்ட சமாதான குறிப்பிற்கு மாறாக 4ம் பிரதிவாதி பெயரில் நான் 2015 ல் ஏற்படுத்திய பிழைத்திருத்தல் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 குறித்து நான் விசாரித்தேனா என்றால் அது சரியான ஆவணம்தான். வா.சா.ஆ.4 ஆவணம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதி தவறான முகவரியை அதில் குறிப்பிட்டுள்ளார். வாதி கோரியப்படி தீர்ப்பும் தீர்பாணையும் பெற தக்கவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.